# “கிறிஸ்துவே திருச்சபைக்குத் தலைவர்“ அல்லது “கிறிஸ்து உங்கள் தலைவராயிருக்கிறார்.“

நாங்கள் யாரென்றும் நாங்கள் ஏன் லுத்தரன் திருச்சபையென்று தனியாய் பிரிந்திருக்கிறோம். என்றும் இந்தச் சிறிய இதழ் மூலம் நாங்கள் உங்களுக்குச் சொல்ல முயற்சிக்கின்றோம்.

<u>“நாங்கள் கிறிஸ்துவர்கள்“</u>

<u>சரியாக கிறிஸ்தவன் என்றால் என்ன?</u>

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை பின்பற்றினவர்களை சீஷர்கள் என்று அழைத்தார்கள். வெகு நாட்களுக்கு முன்பாக அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படார்கள்.

என்னை பின்பற்றுங்கள் என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துஅவர்களுக்குச் சொன்னார். உங்களுக்கு ஒரு தலைவர் இருக்கிறார் அவர் கிறிஸ்து என்று அவரை பின்பற்றுகிறவர்களுக்குச் சொன்னார்.

அதிக ஜனங்கள் அதிக நாட்கள் அவரை பின்பற்ற விரும்பவில்லை.

அவரை பின்பற்றுகிறவர்களில் சிலரை அவர் கேட்டார். நீங்களும் வெளியே போகப் போகின்றீர்களா?

நாங்கள் யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவனுள்ள வார்த்தை உம்மிடத்தில் இருக்கிறதே! என்று அவர்களில் ஒருவர் பதில் சொன்னார்.

நசரயேனாகிய இயேசு என்னும் நாமமுள்ள ஒருவருடைய சீஷன் அல்லது எல்லாவற்றையும் விட்டு அவரை பின்பற்றுகிற ஒருவன் ஒரு கிறிஸ்தவனாயிருக்கின்றான்.

விசுவாசிகள் என்ற பெயரின் மூலம் கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டில் அழைக்கப்படுகிறார்கள்.

கிறிஸ்து அடிக்கடி இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார். யார் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். யாரெல்லாம்

அவரை விசுவாசிக்கிறார்களோ அவர்கள் அழிந்து போவதில்லை. ஆனால் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வார்கள் ஒரு விசுவாசி என்ன விசுவாசிக்கின்றார் என்பதை கிறிஸ்து பொருட்படுத்த வில்லை.

சரியாக இன்றைய நாட்களைப் போலவே ஒரு குறிப்பிட்ட அவருடைய ஊழியத்தில் அநேக மாறுபட்ட வேறுபட்ட பார்வையுடையவர்களாய் இருந்தார்கள். அவரிடத்தில் அவர்கள் எதை, என்ன விசுவாசித்தார்கள் என்று பிறகு அவர் அவர்களிடம் விசாரித்தார். அவரைக் குறித்த அவர்களுடைய பார்வையை கோணத்தை, சொல்லும்படி அவருடைய பன்னிரெண்டு சீஷர்களிடத்தில் அவர் கேட்டார்.

ஜீவனுள்ள தேவனுடைய மகனாகிய கிறிஸ்து நீர்தான் என்று அவர்கள் பதிலுரைத்தார்கள். ஏசு கிறிஸ்துவை கர்த்தர், ஆண்டவர் என்று விசுவாசிக்கின்றவன் ஒரு கிறிஸ்தவன்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூட அதைக் குறித்து அவரை பின்பற்றுகிறவர்கள், விசுவாசமுள்ள அவர் ஊழியத்தை விசுவாசிக்க வேண்டும், என்று உறுதிப் படச் சொல்கிறார். இழந்துப் போனதை தேடவும் இரட்சிக்கவுமே கிறிஸ்து இயேசு இந்த உலகத்திற்கு வந்தார்.

அவருடைய சிலுவை மரணபாடுகளைக் குறித்து அவருடைய முழுமையான அப்பழுக்கற்ற ஜீவியமும் காட்டுகின்றது, என்று நிக்கோதேமு என்னும் பேருள்ள ஒரு மனுஷனிடத்தில் அவர் சொன்னார். ஆகவே மனுஷகுமாரன் பாடுகளைப்பட்டார். அந்த கிறிஸ்துவை யாரெல்லாம் விசுவாசிக்கின்றார்களோ அவர்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு முன்பாகவே ஒரு தூதுவன் சட்டரீதியான அவருடைய தகப்பனுக்குச் சொன்னார். ஏனென்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவனுடைய குற்றத்தை எடுத்துப் போட்டார் என்றும், அவன் பாவத்திற்குண்டான தண்டனையிலிருந்து அவனை விடுவித்தார் என்றும் ஒரு கிறிஸ்தவன் விசுவாசிக்கின்றான்.

வானத்திலேயும், கீழே பூமியிலேயும் சர்வ அதிகாரமுடையவராய் யார் கடவுள் இருக்கிறாரென்றும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவர்கள் உயிர்த்தெழுந்த ஆண்டவரென்றும், ஆதியில் அவரை பின்பற்றினவர்கள் விசுவாசித்தர்கள். அது மாத்திரமல்ல அவர்கள் எந்நிலையிலும், எவ்விடத்திலும் இருந்தார் – என்று விசுவாசித்தார்கள். விசுவாசிகளையும் அவ்விசுவாசிகளையும், எல்லா ஜனங்களையும் நியாயந்தீர்க்கிற நியாதிபதியாய் திரும்பவும் நான் வரப்போகிறேன். என்ற அவருடைய வார்த்தைகளையும் கூட அவர்கள் விசுவாசித்தார்கள்.

மனிதன் பிதாவிடத்திலும், நித்திய மோட்ச இராஜ்ஜியத்திலும் பிரவேசிக்க வேண்டுமேயானால் அவர் மூலமாய்த்தான் போக முடியும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார்.

"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கின்றேன் என்று" அவர் அவரை அழைக்கிறார். யோவா. 14.6.

இந்த விசுவாசம், இயேசுவைப் பின்பற்றுதல், ஒரு மனிதனை ஒரு கிறிஸ்தவனாய் மாற்றுகிறது.

பாவமுள்ளவர்கள் அவர்கள் விசுவாசிகளாகவும், இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாகவும் ஆகமுடியாது அல்ல மாறமுடியாது – என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூட காட்டுகிறார். அவரை பின் பற்றும்படியும் அவரை விசுவாசிக்கும் படியும், அவர் அவரை பின்பற்றுகிறவர்களை அழைத்து அதிகாரம் கொடுத்திருக்கிறார்.

சீஷர்கள் உபதேசிக்கவும், மக்களை விசுவாசத்தில் கொண்டு வரவும் பரிசுத்த ஆவியானவரை அவர் அனுப்புவதாக வாக்குதத்தம் செய்தார்.

ஆகவே ஒரு கிறிஸ்தவன் இந்த உலகத்தில் உள்ள மற்றவர்களைக் காட்டிலும் சிறந்தவன் அல்ல கடவுளுடைய அந்த தேவத்துவம் ஒரு விசுவாசமுள்ளவனாய், சீஷனாய் மாற்றுகிறது. தேவனுடைய வார்த்தையை கேட்பதின் மூலம் இந்த நம்பிக்கை அல்லது விசுவாசம் வருகின்றது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிஷேத்தின் மூலமும் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளாக அல்லது கிறிஸ்தவர்களாக மாற்றுகின்றார். அவ்விசுவாசமுள்ள மனிதனுடைய இருதயத்தை மற்றொரு வழியில் ஞானஸ்நானம் பரிசுத்த ஆவியினால் விசுவாசமுள்ள வனாய் மாற்றுகிறது. ஆயினும் ஞானஸ்நானத்தின் வல்லமை அதனுடைய வல்லமை மிகுந்த வார்த்தையில் இருக்கிறது.

ஆகவே மற்றவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றவும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திற்குள் வளரவும், இந்த பரிசுத்த ஆவியைப் பயன்படுத்தி நாம் எச்சரித்து போதித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தை விட்டு போவதற்கு முன்னால் தம்முடைய சீஷர்களை அழைத்து பரிசுத்த ஆவியை அவரை பின்பற்றினவர்கள் மேல் ஊதி அவருடைய வல்லமையையும், இந்த உலகத்தில் உள்ள எல்லா ஜனங்களுடைய பாவங்களையும் மன்னிக்கும் அதிகாரத்தையும் அவர்களுக்கு கொடுத்தார் இந்த விசவாசிகள் அனைவருடம் மொத்தமாக ஒருங்கினைந்து சேர்ந்து இருப்பதே திருச்சபை என்று அழைக்கப்பட்டது. உண்மையாகவே இயேசு கிறிஸ்து ஒரு முறை அவரை பின்பற்று கிறவர்களை அவருடைய சகோதரர்கள் என்றும், சகோதரிகள் என்றும் கூப்பிட்டார். ஆகவே இந்த திருச்சபையானது உண்மையாகவே இயேசு கிறிஸ்துவினுடைய குடும்பமாகிறது எப்பொழுது இயேசுகிறிஸ்து ஒருவனை தன்னை பின்பற்றும் படி எடுத்தரோ, அவர் கூடவே அவனை கடவுளுடைய முழுக்குடும்பத்தில் உறுப்பினராகவும், எல்லா விசுவாசிகளுடன், இந்தக் கிறிஸ்தவர்களுடன், இந்த ஐக்கியத்தில் இதைச் திருச்சபையில் அவர்களோடு ஒன்றியிருக்கும்படி செய்கிறார்.

விவரமாக நாங்கள் என்னவாயிருக்கிறோம், யாராயிருக்கின்றோம், சாதரணமாக நாங்கள் கிறிஸ்தவர்களாய், இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோம்.

இயேசு கிறிஸ்து தம்முடைய வார்த்தையினால் சொல்லிய எது வாயிருந்தாலும், விசுவாசிக்கின்ற மக்கள் நாங்கள், நாங்கள் சுவிஷேசத்ததை கேட்பதின் மூலம் அப்படிப்பட்ட மனிதர்களாய் மாறி திருச்சபையை சார்ந்திருக்கிறவர்களாய் இருக்கிறோம்.

தனித்தனியாக ஒவ்வொருவரும் எங்கே கடவுளையும், அவருடைய சித்தத்தையும் புரிந்து கொள்கிறதில் நாள்தோறும் வளர்கின்றவர்களாய், இயேசுகிறிஸ்து கடவுளுடைய குழந்தையாயிருந்ததின் மூலம், பாவமன்னிப்பின் நிச்சயத்தில் தினந்தோறும் வளர்கின்றவர்களாய், சேவை செய்கின்றவர்களாய், அவரிடம் அன்பு காட்டுகின்றவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்தவனாய் இல்லாதவர்கள் வெளிப்பக்கம் பார்க்கும் போது சிறப்புடையவர்களாய் இருப்பதில்லை அடிக்கடி, துரததிர்ஷ்டவசமாய் ஒவ்வொருவரும் தனித்தனியாக இன்னும் பாவத்தில் இருக்கிறோம். ஆனால் இங்கும் அங்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவுக்குள் பாவ மன்னிப்பையும் ஒரு புதிய பெலத்தையும் பெற்றுக் கொண்டு அதிகமாய் தலைவரைப் போல அல்லது போதகரைப் போல அதிகமாய்ச் ஜீவிக்கலாம்.

இந்த உலகம் முடிவுக்கு வரும்போது கர்த்தருக்குள் பரிபூரண முழுமையான மகிழ்ச்சியை உடையவராய் பாவம் நிறைந்த உலகத்திலிருந்து மரணத்தின் மூலம் எடுத்துப்போடப்படுகின்ற வர்களாய் அந்த இரட்சகரின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமுள்ளவர்களாய் காத்திருக்கின்றவர்கள். எல்லாச் ஜனங்களும் இரடசிக்கப்படும்படி அந்த ஆழமான காத்திருப்பில் கிறிஸ்தவர்கள் ஆழ்ந்த ஞானமுடையவர்களாய் அவசரமாக, அவசியமாக, தேவனுடைய நற்செய்தியை எடுத்துச் செல்கின்றவர்கள் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றார்கள்.

## குறிப்பாக ஒரே ஒரு திருச்சபை ஏன்?

இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகின்றவர்கள் அவருடைய வார்த்தையை விசுவாசித்து, ஒரே குடும்பமாக வாழ்ந்தால் அவர்கள் ஒரே திருச்சபையினர் ஆவர். அனைத்து கிறிஸ்தவர்களும் கட்டாயமாக ஒன்றுச் சேர்ந்து ஊழியம் செய்து ஒருவரை ஒருவர் பெலப்படுத்தி எல்லா மனிதர்களுக்கும் ஒன்று சேர்ந்து நற்செய்தியை அறிவிக்கவேண்டும். சீஷர்கள் 2000ம் ஆண்டுகளுக்கு என்னச் செய்தார்கள் என்பதைக் காண்போம்.

திருச்சபையானது தன்னுடைய நம்பிக்கையை மக்களுக்கு ஒரு பரந்த அளவில் கொண்டுச் செல்கினன்றது, கிரேக்கர்களையும், ரோம உலகினைரையும், கிரேக்கரோம தத்துவ ஞானிகளையும், மதங்களையும் வசீகரிக்கச் செய்தது. இது படிப்படியாக செய்யப்பட்டது. பரிசுத்த பவுல் திருச்சபையில் மனிதர்களுடைய ஆளுமைக்கு இடமில்லையென்று திட்டவட்டமாக வற்புறுத்திக் கூறியுள்ளார். திருச்சபைக்கு இயேசு ஒருவரே ஆசிரியரும், போதகரும் ஆவார். அவர் மனிதர்களுக்குள்ள விசுவாசத்தையும், திருச்சபைக்குமுள்ள போதனைகளையும் ஏற்படுத்தியவர். ஆனால் படிப்படியாக உலக ஆதாயமும், வசீகரிப்பும் இதை மேற்கொள்ளச் செய்தது. திருச்சபை தலைவர்கள் அதிக அதிகமான அதிகாரங்களை தங்களுக்கு எடுத்துக் கொண்டார்கள். அப்பொழுது போப்பினுடைய ஆதிக்கம் வளர்ச்சி பெற்றது. முக்கியப் பேராயர் உலகப்பிகாரமான திருச்சபையின் தலைவர்கள் இயேசுகிறிஸ்துவுக்குப் பதிலாக பிரதிநிதித்துவத்தை எடுத்துக் கொண்டார்கள். அதிகாரத்தையும் தங்களுக்கு எடுத்துக் கொண்டர்கள்.

இவ்வுலகப் பிரகாரமான திருச்சபையின் தலைவர்கள் தங்களுக்கென்று புதிய விதிமுறைகளையும், போதனைகளையும் ஏற்படுத்திக்கொண்டு அவைகளை இயேசுவை பின்பற்றுகிறவர்கள் பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தினார்கள் உதாரணமாக ஒருவர் கடவுளிடம் உதவிப் பெற கட்டாயமாக அன்னை மரியாளை நோக்கி பிரார்த்தனை செய்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்று உபதேசம் செய்தார்கள்.

பரலோகத்திற்கும், நரகத்திற்கும் இடையில் இடைநிலை இடம் இருக்கிறதென்றும், அங்கே விசுவாசிகளின் ஆத்துமாக்கள் மரணத்திற்குப் பிறகு தங்கும் இடம் அது என்றும் போதித்தார்கள். அங்கே அந்த இடைநிலை இடத்தில் அவர்கள் கட்டாயமாக குற்றநிவாரணம் அடைந்து விட்டோம் என்ற திருப்தி வரும் வரை அவர்கள் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டும் என்றும் உபதேசித்தார்கள்.

பாவங்களுக்காக இயேசுகிறிஸ்து மரித்ததின் மூலம் உலகத்திருச்சபையானது, விசுவாசிகளின் மீது தண்டனையையும், விசேஷகிரியைகளையும், பிரார்த்தனைகளையும், யாத்திரைகளையும், மேற்கொண்டிருக்க வேண்டியதின் அவசியத்தையும் அவர்கள் உபதேசம் வற்புறுத்துகிறது.

ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாட்களில் தான் செய்த தன்னுடைய நற்கிரியைகளில் திருப்தி அடைய வில்லையென்றால், மரணத்திற்குப் பிறகும் அவன் குற்ற நிவாரணம் அடையும் இடத்தில் காத்து இருக்க வேண்டும் என்றும் போதிக்கப்பட்டார்கள். அவனுயை விடுதலை பலி செலுத்தினப்பிறகு மட்டுமே விடுதலை கிடைக்கும் இது எப்படி? பரிசுத்த யோசேப்பு, பரிசுத்தமேரி, பரிசுத்த பவுல், பரிசுத்த யோவான், பரிசுத்த பேதுரு ஆகியவர்கள். இவர்கள் கிரியைக்கும் மேற்பட்ட வாழ்க்கையை நடத்தியவர்கள், இவர்கள் இவர்களுடைய மிக அதிகமான கிரியைகள் ஒரு கருவூலமாக ஒன்று சேர்க்கப்பட்டு இந்த மித மிஞ்சிய கிரியைகள், விசுவாசிகளுக்கு, இவர்கள் மேற்கொண்ட சேமித்து வைத்த அதிக விசுவாசம் உபயோகப்படும் என்று போதித்து வந்தனர் – தங்களை பிரிந்த நண்பர்கள், உறவினர்கள், ஒரு சமயக் குருவின் திருப்பலியின் மூலம், விடுதலை பெறக் கூடும் என்று போதித்து வந்தனர். சில திருச்சபைகளில் முக்கியமாக சமயகுருவிடம், பாவ நிவாரணம் பெற்றுக் கொள்வதின் மூலம் இடைநிலை இடத்தில் கழிக்க வேண்டிய அதிகமான நேரத்தை குறைத்துக் கொள்ளலாம். என்றும், போப்பாண்டவருக்கு சில பரிசுகளை கொடுப்பதின் மூலமாக போப்பாண்டவர் அந்த நேரத்தைக் குறைக்கக் கூடிய அதிகாரத்தை பெற்றிருக்கிறார் என்றும், இது போன்ற அநேக கள்ளப் போதனைகளை கத்தோலிக்க போப்புக்களும், திருச்சபைகளுள் சிலர்களும், திருச்சபைகளில் புகுத்தினார்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உபதேசிக்காத உபதேசங்களும், கிறிஸ்துவினுடைய உபதேசங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களையும், கொண்ட கொள்கைகளையும், பின்பற்றுகின்ற அவருடைய சீஷர்கள் கிறிஸ்துவின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருக்கமுடியாது. மத்திய காலங்களில் வேதாகமத்தை நன்றாக கற்று உணர்ந்த மக்கள் போப்பாண்டவரின் ஆளுகை, அநேக கொள்கைகள், இயேசுகிறிஸ்து கற்பித்த போதனைகளுக்கு முற்றிலும் மாறுபாடானவைகள் என்று சுட்டிக் காட்டினர்.

மார்ட்டின் லூத்தர் என்ற இறையியல் மாணவர் மனச்சாட்சியின் படி, கிறிஸ்து மற்றும் அப்போஸ்தல போதனைகளின் படி சுவிஷேசத்தை பிரசங்கிக்கத் தொடங்கினார். ஆனால் ரோமன் கத்தோலிக்கச் திருச்சபையானது உண்மைக்கு செவி கொடுக்க வில்லை. ஆனால் மார்ட்டின் லுத்தர் சாஸ்திரியார் தொகுத்தளித்த இறையியல் போதனைகளையும், அலட்சியம் செய்தது.

ஜீவனுள்ள தேவனாகிய கிறிஸ்துவுக்கு நம்பிக்கைக்குரிய மக்களாய் இருப்பதற்கு கள்ள போதனைகளுக்கு தங்களை முற்றிலும் வேறுபடுத்திக் கொள்ள வேண்டிய அவசியமிருக்கிறது. தேவனுடைய வார்த்தையையும், அதிலிருந்து பெறப்படும் ஜீவனும், இவ்வுலகத்தின் மிக அருமையான பொக்கிஷங்களாக கருதப்படுகின்றது. இரட்சிப்பாகிய ஜீவத் தண்ணீரோடு மனித போதனைகளை கலந்து நாம் மக்களுக்கும், கடவுளுக்கும் கொடுக்க முடியாது. ஆகையால் நாம் இன்று நம்மை ரோமன் கத்தோலிக்க திருச் சபையிலிருந்தும், மற்ற சபை களிலிருந்தும் நம்மை அப்புறப்படுத்திக் கொண்டும், வேறுபடுத்திக் கொண்டும் வேறுப்பட்டு இருக்கின்றோம்.

அவர்கள் பொய்யான போதனைகளை போதிக்கின்றனர். சீர்த்திருத்த காலங்களில் அவர்கள் இயேசு கிறிஸ்துவின் உண்மையான உபதேசங்களையும், நிஜமான சுவிஷேச பிரபல்யத்தையும் அலட்சியப்படுத்தினார்கள்.

## <u>அநேக பிராட்டஸ் டெண்ட் திருச்சபைகள் ஏன்?</u>

கடவுள் கிறிஸ்துவின் மூலமாக அளித்த உண்மையான மதமாகிய கிறிஸ்துவத்தையும், அதன் விசுவாசிகளையும், ஆதாமையும், ஏவாளையும் வஞ்சித்த சாத்தான் இன்னும் தொடர்ந்து மக்களை வஞ்சித்து வருகின்றான். சீர்த்திருத்த காலத்தில் அநேக ஆசிரியர்கள் மார்ட்டின் லூத்தருடன் சேர்ந்து வேதாகமத்தைப் படித்து ரோமன் கத்தோலிக்கச் திருச்சபைக்கு தங்கள் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். இப்பொழுதும் சில உண்மையான காரணங்கள் பிராட்டஸ்ட் டெண்ட் திருச்சபைகளில் பிளவை ஏற்படுத்தி உள்து. வேதாகமத்தை கற்று கொடுக்கும் துறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியை உண்டாக்கியது. மனிதனின் காரண காரியங்களை அறிவதின் உச்சநிலையை அடைந்தது. மனிதனின் காரண காரியங்களை உச்ச நிலை அறிவியலிலும், கலைத்துறையிலும், அடைந்த உச்ச நிலையாகும் இது. இவ்வித உச்ச நிலை சமயத்துறையில் ஒரு போராட்டத்தை ஏற்படுத்துகிறது. மனிதனுடைய வேளை ஆளாகவும் இருக்கக்கூடும். வேத வாக்கியத்தின் உண்மையை மேலும் மேலும் அறிந்து கொள்வதற்கு மொழி உதவியாகவும் அமைகிறது. இவ்விதம் காரண காரியங்களை அறியும் அறியும் அறிவு மனிதனின் எஜமானாகவும் மாறி அவனை உண்மைக்கு புறம்பாகவும் வழி நடத்தக் கூடும். மனிதன் பாவத்தில் விழும் போது அவனுடைய

அறிவு தேவனுடைய வழிகளை எதிர்க்கிறது. ஆகவே, மனிதனின் காரண காரியங்கள் தேவனுடைய வார்த்தைக்கு அடிமையாக்கப் பட வேண்டும். ரோம ஆட்சி அதிகாரத்தை எதிர்த்த அநேக சீர்த்திருத்தவாதிகள் தங்களுடைய காரண காரியங்களை அறியும் அறியும் அறிவுக்கு மிக உயர்ந்த ஸ்தானத்தையும், கொடுத்து தங்களுடைய மனித தீர்ப்பின்படி கடவுளுடைய கொள்கைகளுக்கும், உபதேசங்களுக்கும், வேறுபட்ட விளக்கங்களை அளித்தனர். மனிதர்களுடைய காரண காரியங்களுக்கு இசைந்திருக்கும் உள்ளம் தங்களுக்கு ஏற்ற விதமாக வேதாகமத்தின் அர்த்தங்களை சரிச் செய்து கொண்டு வேதாகமத்திற்கு மாறுபட்ட காரண காரியங்களுக்குமே பொது அறிவையும் பயன்படுத்தி எதிர்மாறானவைகளைச் சொன்னார்கள். இவ்விதமான மாறுபட்ட கள்ளப் போதனைகள், அநேகப் பிரிவினைகளையும், வித்தியாசங்களையும், வேதாகப்பாடங்களில் ஏற்படுத்தியது. தேவனுடைய வார்த்தைக்கு நாம் நம்மை ஒப்புக் கொடுக்கும் போது திருச்சபைக்குள் ஒரு மித்த வாழ்வை அடையக் கூடும். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரத்தையும், திரு இரத்தத்தையும் திருவிருந்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று சிலருக்கு விளங்கி கொள்ள முடியவில்லை.

அவர்கள் தங்களுக்குள் அநேக பிரிவினைகளை ஏற்படுத்திக் கொண்டு அப்பமும், திராட்சை இரசமும், இயேசுவினுடைய திருச்சரீரத்திற்கும், இயேசு கிறிஸ்துவினுடைய திரு இரத்தத்திற்கும், பதில் என்றும் அதற்குப் பதிலாக அது கொடுக்கப்படுகிறது என்றும் கருதப்படுகிறது. சிறிய குழந்தைகள் விசுவாசித்து சபைகளில் ஞானஸ்நானம் கொடுக்க கூடாதென்றும், கருதுகின்றனர். இவ்விதமான கசப்பான காரண காரியங்கள் தொடர்ந்து மேலும் பல ஆண்டுகளாக பிரிவினைகளை பெருக்கி அதிகமாக்கி வருகிறது. மனித காரண காரியங்கள், வரப்போகின்ற இறை வாழ்வைக் காட்டிலும், இப்பொழுது வாழ்கின்ற வாழ்வு மேன்மையானது என்று வற்புறுத்துகிறது. சில குழுக்கள், குடித்தல், புகை பிடித்தல், ஆகிய தீய நடத்தைகள் திருச்சபைக்கு உதவாதவைகள் என்று கருதுகின்றது. இவ்விதமாக அவர்கள் இந்த உலகத்தை ஒரு வாழ்விற்கு நல்ல இடமாக கருதுகின்றனர்.

100 ஆண்டு காலமாக இவ்விதமான காரண காரியங்கள், வேத வார்த்தைகளுடன் கலப்படம் செய்யப்பட்டு புராட்டஸ் டெண்ட் திருச்சபைகளில் மனிதனால் எழுதப்பட்டவைகள் தேவனுடைய வார்த்தைகள் என்று வழி நடத்தும், எண்ணிக்கையில்லா போதகர்கள் தோன்றியுள்ளனர். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளிலிருந்து ஏன் இந்த உலகத்தோற்றம் முதற்கொண்டே இவர்கள் கிறிஸ்துவின் போதனைகளை தள்ளிவிட்டனர். இயேசுவின் சீஷர்களாக கலப்படமான மனித உபதேசங்களையும்,

போப்பாண்டவரின் கள்ளப் போதனைகளையும் தள்ளிவிட்டு நாம் கிறிஸ்துவுக்கு நம்பிக்கை உடையவர்களாகவும், அவருடைய வார்த்தையை போதிக்கிறவர்களாகவும், இருக்க வேண்டும்.

நம்பிக்கையும், நேர்மையும் உடையவர்கள் இவைகளை தள்ளிவிட்டு இரட்சிப்புக்கு வழி நடத்தக்கூடும். போப்பாண்டவரோ, மனித காரியங்களோ, மனிதனுடைய உபதேசங்களோ நம்மை பரலோகத்திற்கு நேராய் வழி நடத்தாதது. இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே நம்மை பரலோகத்திற்கு நேராய் வழி நடத்தக்கூடியவர்.

லூத்தாரனியர்கள் அல்லது "லூத்தரன்" என்று அழைக்கப்படுகின்ற நாம் மார்ட்டின் லூத்தருடைய விளக்கங்களின் படி வழி நடக்காமல் கடவுளுடைய வார்த்தைகளை பின்பற்றி கடவுளுடைய வார்த்தைக்கு மட்டுமே நம்மை அர்ப்பணிக்க வேண்டும். மனித காரண காரியங்களுக்கு கடவுளுடைய வார்த்தை ஒத்துப் போனாலும், இல்லையென்றாலும் நாம் தேவனுடைய வார்த்தையின்படி அவரை பின் பற்றுகிற லூத்தாரணியர்களாக இருக்கிறோம்.

## <u>ஏன் அநேக லூத்தரன் திருச்சபைகள்?</u>

ரோமன் கத்தோலிக்க திருச்சபைகளில் பிளவுப்பட்ட அநேக திருச்சபைகளில் நாமும் புராட்டஸ்டண்ட் திருச்சபைகளிலிருந்து பிளவு பட்டவர்கள். லூத்தாரணியர் என்ற பெயர் கொண்ட நாம் சாத்தானுடைய தாக்குதலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியாது. கள்ளப்போதனைகள் திருச்சபைகளில் பரவி திருச்சபை ஊழியங்களை கெடுத்து வருகின்றது.

லூத்தரன் மரணத்திற்குப் பிறகு அநேக லூத்தரன் போதகர்கள், சுவிசேஷ போதனைகளை மாற்றி போதிக்கத் தொடங்கினர். மற்றொரு புதிய கொள்கையானது 100 வருடங்களாக இருந்துகொண்டே உள்ளது. அநேக திருச்சபைகள் பிரிந்துபோனபடியால் இப்போது ஒன்றாகச் சேர நினைக்கிறது. இவ்விதமான திருச்சபைகள் இணைவது வார்த்தையின் அடிப்படையில் இல்லாமல், அமையாமல் மனிதனின் காரண காரியங்களால் ஒன்று சேர்கின்றது. அநேகத் திருச்சபையின் தலைவர்கள் ஒன்றுசேரும் இந்த இயக்கத்தில் வேதாகமம்தான் கடவுளுடைய வார்த்தை என்று உணராதிருக்கின்றார்கள். அவர்களுடைய காரண காரியங்கள் எல்லா திருச்சபைகளிலும், சில உண்மைகளும், சில தவறுகளும் இருப்பதால் அங்கும் இங்கும் ஒன்றுச்சேர்ந்து

கருத்துக்களை பரிமாற்றம் செய்துக்கொண்டு ஒருமித்த திருச்சபையை அமைக்க விரும்புகின்றனர். நல்லதோ அல்லது அது கெட்டதோ உபதேசங்களுக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது. இவ்விதமான கூடுகை அல்லது சேர்க்கை ஆகும். சில லூத்தரன் போதகர்கள் அமெரிக்க தேசத்திற்குப் போய் சுவிசேஷ கட்டளைக்கு ஏற்ப வேதாகம வசனங்களை போதிக்க வழி நடத்துகிறது. அநேக லுத்தரன் திருச்சபைகள் இம்மாதிரியான கூட்டு இயக்கங்களால் வசீகரிக்கப்படுகின்றனர். சில சபைகள் கள்ளப் போதக திருச்சபைகளோடும், அவர்கள் வேலையிலும், ஐக்கியத்திலும் பங்கு பெற்றுள்ளனர். அவர்கள் தங்கள் திருச்சபைகளில் தவறான போதனைகளை பின்பற்றுகின்றனர். இதனுடைய முடிவு அவர்கள் கள்ள உபதேசங்களை தங்களுடைய சொந்த திருச்சபையின் பிரிவுகளில் சகித்துக் கொள்கின்றனர். அதே வேளையில் தவறுகளையும் ஏற்றுகொள்கின்றனர்.

லூத்தரன் திருச்சபையின் ஒரு பிரிவினர் 100 ஆண்டுகளாக இவ்விதம் கலப்படமற்ற உபதேசங்களை ஏற்றுக்கொண்டு மற்ற கலப்படமுள்ள உபதேசங்கள், கொள்கைகள் ஆகியவைகளுடன் சமரசம் அல்லது உடன்பாடு செய்துக் கொள்ளாமல் 100 ஆண்டுகளாக கலப்படமற்ற கடவுளுடைய வார்த்தைகளை அதனுடைய பரிசுத்தம் கெடாமல் போதித்து வருகின்றனர். அவர்கள் பள்ளிகளிலும், திருச்சபைகளிலும், மற்ற அவர்களுடைய ஸ்தாபனங்களிலும் கள்ள உபதேசங்களை சகித்துக் கொள்வதில்லை. திருச்சபை ஒரே ஒரு வார்த்தையைக் குறித்து அறிவிக்க வேண்டும். அந்த வார்த்தை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, மற்ற வார்த்தைகள் தவறான வார்த்தைகளும், ஒவ்வொருவரையும் தனிப்பட்ட ஒருவனையும் மாசுபடுத்துகிற வார்த்தைகளாகவும் இருக்கிறது. இவ்விதமாக திருச்சபைகளில் கள்ள உபதேசங்களை தாங்குவதின் மூலம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு புறம்பானவர்களாக இருக்கின்றோம். இவ்விதமான வித்தியாசங்கள் தோன்றும்போது வேதாகமத்தை நன்கு ஆராய்ந்து இயேசுகிறிஸ்துவின் அடிப்படையின் மூலம் தீர்வு காண வேண்டும். 100 ஆண்டுகளாக இவ்விதமான திருச்சபை மனித உபதேசங்கள் என்றும், நவீன வழிகளையும், விசாலமான வழிகளையும், எதிர்த்து வருகின்றது. 1935ம் ஆண்டிலிருந்து மிகப்பெரிய திருச்சபைகளில் ஒன்று "மிசோரி கழகம்" விட்டுக் கொடுக்கும் தன்மை, சகிப்புத்தன்மை ஆகிய நிலைகளை மேற்கொண்டு லூத்தரன் திருச்சபைகளுடன் விரிவான எதிர்மாறான உபதேசங்களை போதித்து வருகின்றது. இந்த மிசோரி கழகம் தங்கள் யோசனைகளையும், அவர்களுடைய யோசனைகளையும் பிராட்டஸ்ரடண்ட்களின் பொதுவான எண்ணங்களையும் கலந்து கடவுளுடைய வார்த்தைக்கு எதிர்ப்பாக, புதியவைகளையும், பழையவைகளையும்

இணைத்து உலக அளவில் ஒருங்கிணைந்த இயக்கத்தை விரிவாக்கியது. இவ்விதமான இணைப்பும், பெலவீனமும், அதன் சமரச உடன்பாடும், அநேக குழுக்களை பாதித்துக் கொண்டிருக்கிறது. இது ஒரு மனவேதனை தருகின்ற ஒரு செயலாகும்.

**<u>நம்முடைய திருச்சபை?</u>**

இவ்விதமான மோசமான நிலையிலிருந்து CLC (சி.எல்.சி) பிறக்கிறது. விலை மதிக்கமுடியாத சுவிசேஷம், மனித அறிவிலிருந்து வித்தியாசங்களை பிரித்து ஒரு புதிய அமைப்பாக CLC (சி.எல்.சி) தோற்றுவிக்கப்பட்டது. தேவனுடைய சுவிசேஷத்தை கலப்பில்லாமல் உண்மையாகவும், தெளிவாகவும், யாதொறு சந்தேகமும் இல்லாமலும், எவ்வித மாற்றமும் இல்லாமலும், கூட்டல் கழித்தல் இல்லாமலும், நாம் கிறிஸ்துவையும், பாவ மன்னிப்பின் நற்செய்தியையும் அறிவிக்கவும், நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்கிறோம். நாம் தவறு செய்யும் மனிதர்கள் ஆனால் நாம் நம்முடைய போதனைகளுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொண்டு ஆராதனை பீடங்களிலும், பள்ளிகளிலும், தவறு செய்யாமல், தேவனுடைய பெலத்தால் உந்தப்பட்டு, இயேசுகிறிஸ்துவினுடைய சத்தியத்தை காப்பாற்றும் ஊழியர்களாக இருக்கின்றோம்.

தேவனுடைய சுவிசேஷம், மனித உபதேசங்கள் அற்ற சுவிசேஷமாகும், ஆனால் இச்சுவிசேஷத்தில் எல்லா மனிதர்களும் தேவனுடைய இரக்கத்தினால் அழைப்பை பெற்றுக் கொள்கின்றனர். மத் 11:28.

இந்தப் பிரதியில் 60 குறிப்புக்கள் உண்மையான லூத்தரன்கள் என எண்ணத்தோன்றும். இது முற்றிலும் வேதாகம உபதேசங்களாக அடங்கியுள்ளது. நம்முடைய லூத்தரன் உபதேசங்கள் கட்டாயமாக வேதாகம போதனைகளே – வேதாகம போதனைகளே கட்டாயமாக லூத்தரன் போதனைகள் ஆகும்.

**இந்த இதழுக்குண்டான வேதாகம குறிப்புக்கள் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. படிக்கவும்.**

1. மத் 9:9
2. மத் 23:8
3. யோவா 6:68
4. அப் 5:14
5. மாற் 16:16
6. யோவா 3:16
7. மத் 16:16
8. லூக் 19:10
9. யோவா 3:14–15
10. மத் 1:21
11. மத் 24:25
12. யோ 14:6
13. யோ 14:16–17, 26
    1 கொரி 12:3
14. ரோம 6:4
15. எபி 4:12
16. ரோம 10:17
17. யோவா 20:21–23
18. மத் 12:49–50
19. எபே 2:19–22
20. II பேது 3:18, 1 பேது 2:2
21. 1 பேது 2:21
22. II தீமோ 4:8, பிலிப் 3:11–14
23. அப் 20:28–29, II தீமோ 4:3–5
24. அந்திக் கிறிஸ்து
    II தெச 2:3–11
25. ஒரு மத்தியஸ்தர்
    1 தீமோ 2:5

26. பரலோகத்திற்கும் – நரகத்திற்கும் இடையில் இருக்கிற இடைநிலை இடம் என்பது இல்லை.

எபி – 9:27, லூக் 16:19–31

27. ரோமர் 8:1

28. ரோமர் 3:10–18

29. எபே 2:8–9, 1 யோ 1:7

30. யோவா 8:31–32, II யோவா 9

31. ரோம 16:17–18

32. 1 கொரி 1:17–31, 2:14–16, எபி 11:1

33. 1 கொரி 11:24–25

34. மத் 18:6, 1 பேது 3:21

35. II தீமோ 3:16, II பேது 1:21

36. I கொரி 1:10, பிலிப் 1:27, 2:2, எபேசி 4:3, ரோம 15:3–6

37. கலாத் 5:9

38. சங் 119:105, நீதி 6:23

39. வெளி 22:18–19

40. மத் 11:28